முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

04.07.2024

1. சரவண சோதியில் கலந்து
சடாட்சர பலமாய் வெளிப்பட்டு
அறிவுரை அருளாசி நூலாக
அருட்சுவடியில் அரங்கனும் பேசிடுவேன்

2. பேசிட ஞானவழி தேடும் என் மக்கட்கு
பிரம்மவேளை கால சூட்சுமம்தனை
ஆசியாக குரோதி மிதுன திங்கள் குருவார
அன்பர்கள் மனபலம் வளமுற உரைப்பேன்

3. உரைக்கவே சேய்களே பண்பட
உயர்வாய் பிரம்மவேளை எழுதலும்
குறைவின்றி செயல்படுதலும் நலம்
குறிப்பாக தீபம் ஏற்றி பூஜிக்க

4. பூஜிக்க ஆரோக்கியம் மனத்தெளிவு
புண்ணிய வழி மனஒடுக்கம் கண்டு
பூசை சித்தி சகல காரிய சித்திபெற்ற
பூரணத்துவம் கண்ட ஞானிகளை

5. ஞானிகளை உணரும் காணும் ஆசி
ஞாலமதில் தெய்வநிலை எட்ட நேரும்
ஞானமுடன் பிரம்மவேளை எழுந்தவனால்
நம்பி செய்யும் பூசைக்கு உயிரோட்டம் தர நேரும்

6. உயிரோட்டம் தரும் அந்த பூசையில்
உயர் ஞானி அரங்கன் என்னை
தாயாக சோதியாகக் காண நேரும்
தயவுடனே சோதி ஏற்றி வழிபாட்டை

7. வழிபாட்டை எந்த தேசத்தில் எந்த மண்ணிலும்
வறுமையுள குடிசைதனிலும் செய்தாலும்
தெளிவூட்டி அங்கு அரங்கன் யான்
தெய்வமாக இறங்கி ஆசியும் காட்சியும் தருவேன்

8. தருகுவேன் இன்னும் பல ஆசி
தவதரும ஞான வழிகாட்டலாக
ஆறுமுக அரங்க அருட்சுவடியாக
அளவிலா வெளிப்பட்டு அன்பர்களை காப்பேன்

9. காப்பாய் கலியில் கந்தவேலா
கருணை கொண்டு அன்பர்கட்கு
வாய்ப்பாய் ஜீவநாடி வழி பேசிட
வரம் தந்த சுப்பிரமண்யா சரணம் சரணம் அரங்கமகான் அருளாசி முற்றே.

—சுபம்—